| இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024 | 12ஆம் வகுப்பு | |
|---|---|---|
| பொருளியல் | மதிப்பெண்கள் 90 | நேரம் 3.00 மணி |

## பகுதி - அ

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 20 x 1 = 20

1. சமத்துவதின் தந்தையை கண்டுபிடி
 அ. ஜே எம் கீன்ஸ் ஆ. கார்ல் மார்க்ஸ் இ. ஆடம் ஸ்மித் ஈ. சாமுவேல்சன்
2. ............ துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது
 அ. கட்டடத்துறை ஆ. விவசாயத்துறை இ. பணித்துறை ஈ. வங்கித்துறை
3. வேலைவாய்ப்பைப் பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் மையக்கருத்து என்பது
 அ. குறைந்து செல் விளைவு விதி ஆ. தேவை விதி இ. அங்காடி விதி ஈ. நுகர்வு விதி
4. கீன்ஸின் கோட்பாட்டின் பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது.............ஆகும்.
 அ. வட்டி வீதம் ஆ. விளைவுத் தேவை இ. தொகுத் தேவை ஈ. தொகு அமைப்பு
5. கீன்ஸின் கருத்துப்படி முதலீடு MEC ஐயும் ............. சார்ந்தது
 அ. தேவையையும் ஆ. அளிப்பையையும் இ. வருவாயையும் ஈ. வட்டி வீதத்தையும்
6. M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்
 அ. அஞ்சல் அலுவலக வைப்புகள் ஆ. வங்கியின் கால வைப்புகள்
 இ. வங்கியின் சேமிப்பு வைப்புகள் ஈ. காகிதப்பணம்
7. வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது
 அ. கடன் பணம் ஆ.முன் பணம் இ. கடன் பணம் மற்றும் முன் பணம் ஈ. கடன் பெறுதல்
8. வாணிப வீதம் ................ பற்றி குறிப்பிடுகின்றது.
 அ. பொருள் ஏற்றுமதி இறக்குமதி விகிதம் ஆ. இறக்குமதி விலை விகிதம்
 இ. ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம் ஈ. (அ) வும் (இ) யும்
9. பன்னாட்டு பண நிதியம் கீழ்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது
 அ. பாண்டுங் மாநாடு ஆ. சிங்கப்பூர் மாநாடு இ. பிரிட்டன் உட்ஸ் மாநாடு ஈ. தோஹா மாநாடு
10. அரசின் வருவாய் வரவு கணக்கில் சேராதது எது?
 அ. வட்டி ஆ. இலாபம் மற்றும் இலாப ஈவு
 இ. கடன்களைத் திரும்ப பெறுதல் ஈ. சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்
11. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?
 அ. இந்திய அரசின் நிதியினை ஆ. நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்
 இ. பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல் ஈ. எதுவுமில்லை
12. உலக வெப்பமயமாதல் ................. என்றும் குறிப்பிடப்படுகிறது.
 அ. சூழலில் மாறுபாடு ஆ. பருவநிலை மாறுபாடு இ. வளிமண்டல மாறுபாடு ஈ. எதுவுமில்லை
13. உயிர்சார் (Biotic) என்ற வார்த்தையின் பொருள் எது?
 அ. உயிர் வாழ்வன ஆ. உயிரற்றவை இ. பருப்பொருள் ஈ. எதுவுமில்லை
14. எம்.என். ராய் வழங்கியத் திட்டம் கீழ்க்கண்டவற்றுள் எது?
 அ. காங்கிரஸ் திட்டம் ஆ. மக்கள் திட்டம் இ. பாம்பே திட்டம் ஈ. இவை அனைத்தும்
15. நிதி ஆயோக் கீழ்க்கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது?
 அ. குடியரசு தலைவரின் அவசர ஆணை ஆ. குடியரசுத் தலைவரின் சுற்றறிக்கை
 இ. அமைச்சரவைத் தீர்மானம் ஈ. எதுவுமில்லை
16. கேள்வித்தாள் மூலம் புள்ளி விவரம் திரட்டப்பட்டால் அது ................
 அ. முதல் நிலை விவரம் ஆ. இரண்டாம் நிலை விவரம்
 இ. வெளியிடப்பெற்ற விவரம் ஈ. தொகுக்கப்பட்ட விவரம்
17. பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து
 அ. மொத்த விலைக் குறியீடு ஆ. வாணிபச் சூழல் இ. பணவீக்கம் ஈ. தேசிய வருவாய்
18. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்
 அ. உயர்ந்தபட்சமாக ஆ. மிக மோசமாக இ. மிக குறைந்தபட்சமாக ஈ. மிக நல்லமுறையில்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner

19. இறுதிநிலை நுகர்வு விருப்பு = ..........

அ. மொத்த செலவு / மொத்த நுகர்வு  ஆ. மொத்த நுகர்வு / மொத்த வருமானம்

இ. நுகர்வு மாற்றம் / வருவாய் மாற்றம்  ஈ. எதுவுமில்லை

20. கீழ்க்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது?

அ. ஒரு பொருளின் மேம்பாட்டு காலகட்டம்  ஆ. உற்பத்தி காரணிகளின் ஒப்பீட்டு விலை

இ. அரசாங்கம்  ஈ. மேற்காண் அனைத்தும்

## பகுதி – ஆ

**II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 30 கட்டாய வினா.** 7 x 2 = 14

21. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக
22. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
23. விளைவுத் தேவை என்றால் என்ன?
24. பொன்திட்டம் என்றால் என்ன?
25. இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) வரையறு
26. மைய வங்கி என்பதனை வரையறு
27. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக
28. ஆசியானின் இரண்டு நோக்கங்களை குறிப்பிடுக
29. பொதுக்கடன் என்பதன் பொருள் யாது?
30. நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?

## பகுதி – இ

**III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 40 கட்டாய வினா.** 7 x 3 = 21

31. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக
32. தேசிய வருவாய் கணக்கிடுதலில் இரு முறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு?
33. தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக.
34. கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருதுகளைக் கூறு
35. பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக
36. ஒப்புமை செலவுக் கோட்பாட்டினை விவரி.
37. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக
38. குறிப்பு வரைக : அ) பருவநிலை மாற்றம்  ஆ) அமில மழை
39. இந்தியாவின் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தை விளக்குக
40. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக

## பகுதி – ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 7 x 5 = 35

41. அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி (அல்லது)

ஆ) தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி

42. அ) ADF மற்றும் ASF க்கும் இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி (அல்லது)

ஆ) நுகர்வு சார்பின் அக மற்றும் புற காரணிகளை விளக்குக

43. அ) பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை? (அல்லது)

ஆ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை?

44. அ) அயல்நாட்டு செலுத்துகை சமமின்மையின் வகைகளை விவரி (அல்லது)

ஆ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க

45. அ) நிதிக் கொள்கையின் கருவிகள் எவை (அல்லது)

ஆ) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக

46. அ) பல்வேறு வகையான திட்டமிடல் வகையினை விவரி (அல்லது)

ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை எழுதுக

47. அ) புள்ளியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்கு (அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினைக் கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 35 | 35 | 36 | 39 |
| விற்பனை Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
CamScanner
padasalai.Net